வழக்கு இல:பி/139/2000.

பொன்னுத்துரை மகேஸ்வரன், 21 வயது, இலங்கைத்தமிழ், இந்துசமயம், கூலிவேலை, மிருசுவில் வடக்கு, மிருசுவில். தற்போது இடம்பெயர்ந்து இராசகிராமம், கரவெட்டி மேற்கு, கரவெட்டி. உறுதிப்படுத்தப்பட்டார்.

எனது பெயர் பொன்னுத்துரை மகேஸ்வரன். இப்போது நான் இராசகிராமம், கரவெட்டி மேற்கில் வசித்து வருகின்றேன். கரவெட்டியில் நான் அம்மா, அப்பா, சகோதர, சகோதரிகளுடன் வசித்து வருகிறேன். நான் கூறிய விலாசத்தில் 01.10.2000 தினத்திலிருந்து வசித்து வருகிறேன். 01.10.2000 தினத்திற்கு முன்னர் மிருசுவில் வடக்கு, மிருசுவிலில் வசித்து வந்தேன். மிருசுவில் வடக்கில் இருந்து, இயக்கத்தின் செல் வீச்சுக்காரணமாக இடம்பெயர்ந்தோம். எமது வீட்டிலும் செல் விழுந்து வீட்டிற்கு சேதம் ஏற்பட்டுள்ளது. மிருசுவில் வடக்கு வீட்டிலும் அம்மா, அப்பாவுடன் மொத்தமாக ஐந்து பேர் இருந்தோம். எமது குடும்பத்தில் என்னுடன் சேர்த்து அம்மா அப்பாவிற்கு எட்டுப்பிள்ளைகள். நான் குடும்பத்தில் ஆறாவது பிள்ளையாகும். எனக்கு மூத்த அக்கா நால்வரும் அண்ணா ஒருவரும் தங்கை ஒருவரும், தம்பி ஒருவரும் உள்ளனர். எமது குடும்பத்தில் ஐந்து பேர் திருமணம் செய்து விட்டனர். நான் தம்பி, தங்கை ஆகியோர் திருமணம் செய்யாது வீட்டில் இருந்தோம். மிருசுவில் வீடு அம்மாவுக்கு சொந்தமானது. அந்த வீடு அமைந்துள்ள இடம் 5 பரப்பு கொண்டது. எமது வீட்டுக்காணியில் தென்னைமரம், கஸ்கொட்டை மரம், இலுப்பையும் அதனுடன் பலாமரமும் பூ மரங்களும்இருக்கிறது. நான் மிருசுவில் றோமன் கத்தோலிக்க

...02

பாடசாலையில் படித்தேன். நான் மூன்றாம் வகுப்புவரை படித்தேன். அதன்பின் எனது தந்தையாருடன் உதவியாக வேலைக்குச் சென்றேன். எனது தந்தையாருடன் விறகு வெட்டுவதற்கும், தோட்டம் கொத்துவதற்கும் உதவியாகச் சென்றேன்.

01.10.2000 திகதியன்று கரவெட்டிக்கு இடம்பெயர்ந்து வந்து 5,6 நாட்கள் கழிந்தபின் ஒவ்வொரு நாளும் மிருசுவிலுக்குச் சென்று வருவேன். போகும்போது அதிகமாக அப்பாவுடன் செல்வேன். ரவிவர்மனுடனும் சென்று வருவேன். நான் ரவிவர்மனுடன் கடைசியாகச் 19.12.2000அன்று வீடுபார்க்க மிருசுவிலுக்கு சென்றேன். 19.12.2000அன்று ரவிவர்மன் எனது வீட்டிற்கு வந்து அதிகாலை 6.00மணியளவில் மிருசுவிலுக்கு சென்றேன். நான் வீட்டிற்கு பின்னால் இருந்த அம்மாவிடம் கூறிவிட்டு சென்றேன். அம்மா ரவிவர்மனைக் கண்டாரோ தெரியாது. வீட்டில் ஏனையவர்கள் நித்திரையில் இருந்தார்கள். 18.12.2000 அன்று மிருசுவிலில் இருந்து வழமைபோல் கரவெட்டிக்கு திரும்பி வந்தபோது ரவிவர்மனுடன் மறுநாள் 19.12.2000அன்று மிருசுவில் போவது பற்றி கதைத்திருந்தேன். 19.12.2000அன்று ரவிவர்மனுடன் தனித்தனி சைக்கிளில் மிருசுவில் சென்றோம். நான் ஹீரோ புதிய சைக்கிளில் சென்றேன். இச் சைக்கிளைக் கண்டால் அடையாளம் காட்டமுடியும். ரவிவர்மன் ஹமாலா சைக்கிளில் வந்திருந்தார். அரைப்புதிய இந்த சைக்கிளையும் கண்டால் அடையாளம் காட்டமுடியும். போகும்போது கான்பாக ஒன்றில் 2 உரபாக் ஒரு பெரிய வெட்டுக்கத்தி, ஒரு சிறியகத்தி, கயிறு, ஒரு ஜோடு, 2 சைக்கிள் சாவி ஆகியவற்றை கொண்டு சென்றேன். ( கறுப்புநிற 6சிப் பாக்) நான் போகும்போது நீலநிற பெரிய பெட்டி [illegible] சரம், வெள்ளைக் கோடுபோட்ட நீலநிற ரீசேட் அணிந்திருந்தேன். ரவிவர்மன் நீலநிற சிறியபெட்டி சரமும், முழுக்கை நீல நிற கஸ்பா சேட்டும் அணிந்திருந்தார். நீல சாரத்தில் மஞ்சள் பெட்டியும் கலந்திருந்தது.

ரவிவர்மனுக்கு முழங்கைக்கு கீழே இடது கை இல்லை. அவருக்கு இடது கண் தெரியாது. இடது கண்பகுதியில் காய அடையாளங்கள் உண்டு. அவருக்கு உடம்பில் காய்கள் வளர்ந்து இருந்தது. அவர் கறுப்பு நிற-முடையவர். சாதாரண உயரம் உடையவர். சுமார் 5½ அடி இருக்கும். உடம்பு அவ்வளவு இல்லை. அவருக்கு 19 வயது. இந்தியன் ஆமியின் செல் 7,8 வயதில் பட்டு கை துண்டிக்கப்பட்டிருந்தது.

19.12.2000அன்று காலை 6.00 மணிக்கு கரவெட்டியிலிருந்து புறப்பட்டு மிருசுவில் செல்லும் வழியில் கொடிகாமம் கடையில் தேநீர் குடித்தோம். அந்தக்கடை "மாமா கடை" என்று அழைப்பார்கள். நாங்கள் வழமையில் அந்தக் கடையில் தேநீர் அருந்துவோம். அதனால் அவரை எனக்குத் தெரியும். ஆனால் என்னை அவருக்குத் தெரியுமோ என்பது பற்றி எனக்குத் தெரியாது. மாமா கடையில் பழையநேரம் 7.15 மணியளவில் தேநீர் குடித்தோம் காலை 7.15மணிக்கு தேநீர் குடித்துவிட்டு மிருசுவிலில் இருக்கும் ரவிவர்மன் வீட்டுக்குச் சென்றோம். கொடிகாமத்திலிருந்து கண்டிவீதிவழியாக மிருசுவில் சென்று மிருசுவில் தேவாலயத்திற்கு அருகில் அமைந்துள்ள சோதனைச்சாவடியை தாண்டி வடக்கு மிருசுவில் பாதையால் ரவிவர்மன் வீட்டிற்குச் சென்றோம். நாங்கள் கொடிகாமத்திலிருந்து ரவிவர்மன் வீடு செல்வதற்கு இடையில் எனக்குத் தெரிந்த நண்பர் எவரையும் சந்திக்கவில்லை. மிருசுவில் சந்தியில் இராணுவ சோதனைச் சாவடியில் என்னையும், நான் கொண்டு சென்ற பொருட்களையும், அடையாள அட்டையையும் இராணுவத்தினர் சோதித்துப்பார்த்தனர். மிருசுவிலுக்கு முதல் முன்னி, கொடிகாமம் ஆகிய வீதிச் சோதனை சாவடிகளில் இராணுவத்தினர் எங்கள் இருவரையும் சோதித்துப்பார்த்தனர். மிருசுவில் சோதனைச் சாவடிக்கு செல்லும்போது காலை 7.30மணியிருக்கும் காலை 7.45 மணியளவில் ரவிவர்மனின் வீட்டுக்குச் சென்றோம். மிருசுவில் சோதனைச்சாவடியில் என்னிடம் அடையாள அட்டையை பரீட்சித்து பார்த்த

..04.

இராணுவ வீரரை கண்டால் அடையாளம் காட்டமுடியும். எனது வீடு ரவிவர்மன் வீட்டிற்கு பக்கத்தில் அமைந்துள்ளது. ஒரே வேலி இரு வீடு களையும் பிரிக்கிறது. நாங்கள் கொண்டு சென்ற இரு சைக்கிள்களையும் ரவிவர்மனின் வீட்டு விறாந்தையில் விட்டோம். ரவிவர்மனின் வீட்டில் வைத்திருந்த எனது மாற்றுச்சாரத்தை அணிந்து கொண்டு கரவெட்டியிலிருந்து அணிந்து சென்ற ஆடைகளை களைந்து வைத்தேன். நீலநிற சின்ன பெட்டி பழைய சாரத்தை அணிந்தேன். ரவிவர்மன் நீலநிற கட்டைக் களிசான் அணிந்து கொண்டு உடுப்புக்களை மாற்றினார். நாம் இருவரும் மேல் உடுப்புக்களை அங்கு அணியவில்லை.

நான் உடுப்பை மாற்றிவிட்டு மண்வெட்டி, கத்தி, குப்பைவாரி ஆகியவற்றை எடுத்துக்கொண்டு ரவிவர்மன் வீட்டுக் கேற்றால் வெளிக்கிட்டு எனது வீட்டிற்கு போனேன். எனது வீட்டிற்குச் சென்று புற்களை வெட்டி துப்பரவாக்கினேன். அப்பொழுது காலை 8.30 மணியளவில் எனது மைத்துனர் ஞானச்சந்திரனும், அவரது மகன் சாந்தனும் ரவிவர்மனின் வீட்டிற்குச் சென்று அங்கிருந்து என்னைத்தேடி எனது வீட்டிற்கு வந்தனர். அவர்கள் எனது வீட்டிற்கு வரும்போது கோடரியும், கத்தியும் கொண்டு வந்தனர். அவர்கள் வைத்திருந்த கத்தியை ஞாபகத்தில் இல்லாததால் அடையாளம் காட்டமுடியாது. ஆனால் நான் கொண்டு சென்ற கத்திகளை கண்டால் அடையாளம் காட்டமுடியும். எனது மைத்துனர் ஞானச்சந்திரன் நீலநிற பெரிய பெட்டி சாரம் அணிந்திருந்தார். வெறும் மேலுடன் வந்தார். சாந்தன் நீலநிற கட்டைக்காற்சட்டை அணிந்திருந்தார். சாந்தனும் வெறும் மேலுடன் வந்தார். அவர்கள் இருவரும் என்னிடம் வந்து விறகு வெட்ட போகவில்லையா என கேட்டனர். நான் இன்று இங்கு நின்று நாளைக்குத்தான் போகப்போகிறேன். சித்தப்பாவிடம் விறகு வெட்டுவது பற்றி கேட்டு சொல்கிறேன் என கூறினேன். சித்தப்பாவின் பெயர் வில்வராசா. நான் உடனே சித்தப்பாவிடம் கேட்டேன். சித்தப்பாவின் வீடு எனது வீட்டிற்கு முன்னால் மணல் ஒழுங்கையைக்

...05.

கடந்து செல்ல வேண்டும். சித்தப்பா பி.ப. 2.00 அல்லது 3.00மணிக்குச் செல்வோம் என கூறினார். நான் சித்தப்பாவை கூப்பிட்ட போது அவர் ஒழுங்கைக்கு வந்து கதைத்தார். அப்பொழுது அன்ரி வீட்டில் இருந்தார். அன்ரியின் பெயர் செல்வராணி. நான் கைக்கடிகாரம் அணிந்திருக்கவில்லை. நேரத்தைக் கூறும் போது உத்தேசத்தில் தான் கூறினேன். நான் சித்தப்பா கூறியதை வீட்டிற்கு வந்து மச்சாளிடம் கூறினேன். அவர்கள் சரி என்று கூறி பின்னேரம் போவதற்காக வீட்டு விறாந்தையில் இருந்தார்கள். நான் சுத்தப் படுத்திக்கொண்டு இருந்தேன். சுத்தப்படுத்திய பின் மு.ப.10.15, 10.30 மணியளவில் ரவிவர்மன் வீட்டிற்கு சென்று 200 ரூபா கொடுத்து 2 கிலோ அரிசி, தூள், உப்பு, வெங்காயம், மிளகாய், மின்ரின், ½ போத்தல் மண்ணெண்ணை ஆகியவற்றை வாங்கி வரும்படி கூறினேன். நான் 400 ரூபா கொண்டு சென்றேன். கொடிகாமத்தில் தேநீர் அருந்தியபோது 50 ரூபா கொடுத்து மிகுதி பணத்தை வாங்கிக் கொண்டு பேர்சுக்குள் வைத்து நான் அணியும் ரீசேட் பொக்கற்றுக்குள் பேர்சை வைத்து ரவிவர்மன் வீட்டில் வைத்திருந்தேன். பேர்சினுள் இரண்டு அடையாள அட்டைகளும், காசும், ஆமி பாஸ்சும் வைத்திருந்தேன். கறுப்பு பெரிய பேக், ரவிவர்மனை கொடிகாமத்தில் பொருட்களை வாங்க அனுப்பிவிட்டு, ரவிவர்மன் வீட்டு முன் ஒழுங்கையில் நின்ற பொழுது ஜெயச்சந்திரனும் அவருடைய மைத்துனர் தெய்வகுலசிங்கமும் வந்தார்கள். அச்சமயம் நேரம் கிட்டத்தட்ட மு.ப. 10.30 மணியளவில் இருக்கும். தெய்வகுலசிங்கம் வெள்ளை நிற கட்டைக் காற்சட்டையும் வெள்ளைநிறமுடைய வெள்ளை பெனியனும் அணிந்திருந்தார். ஜெயச்சந்திரன் சாரம் மட்டும் அணிந்திருந்தார். இருவரும் கையில் கத்தி வைத்திருந்தனர். தெய்வகுலசிங்கமும் ஜெயச்சந்திரனும் விறகு வெட்டச் செல்வது பற்றிக்கேட்ட போது சித்தப்பா கூறியதை கூறி நின்று நாளைக்கு போவோம் என கூறினேன்.

ரவிவர்மன் 11.00 மணியளவில் பொருட்கள் வாங்கிக் கொண்டு கொடிகாமத்தில் இருந்து திரும்பி வந்தார் அதன்பின் ரவிவர்மன் வீட்டில் இருந்து மச்சான் ஞானச்சந்திரன் சமைத்தார் நானும் உதவி செய்து கொடுத்தேன். சமைத்து முடிந்தபின் சாப்பிட்டு விட்டு சிறிது நேரம் படுத்துவிட்டு எனது வீட்டிற்குச் சென்றேன். எனது வீட்டிற்கு தனியே சென்றேன். சாப்பிடும்போது நான்கு பேர் இருந்து சாப்பிட்டோம். வீட்டிற்குச் சென்று சிறிது நேரம் வீட்டைத்துப்பரவு செய்தேன். சித்தப்பா ஒழுங்கையில் நின்று போவமோ என கேட்டார். அப்பொழுது பி.ப.3.00மணி இருக்கும். அதன்பிறகு கூப்பிட்ட எல்லோரும் சித்தப்பாவின் வீட்டின் முன்படலையடிக்கு வந்தனர். எல்லோரும் சேர்ந்து புறப்பட்டோம். விறகு வெட்டுவதற்காக சித்தப்பாவின் மகன் இருவருக்கும் சைக்கிள் இல்லை. ஏறு சைக்கிளில் ஓட முடியாது உருட்டிச்சென்றோம்.

ரவிவர்மன் லுமாலா சைக்கிளில் வந்தார். அவர் நீலநிற கட்டைக் காற்சட்டை அணிந்து மேலே நீலநிற மஞ்சள் நிறம் கலந்த வெட்டிச்சரம் அணிந்திருந்தார். அவரின் கையில் சிறிய கத்தியும், உரப்பையும், கயிறும் இருந்தது.

தெய்வகுலசிங்கம் லுமாலா சைக்கிளில் வந்தார். வெள்ளை சோட்சும், வெள்ளை நிற வட்டக்கழுத்து பெனியனும் அணிந்திருந்தார். அவரிடம் கத்தி இருந்தது.

ஞானச்சந்திரன் இனம் தெரியாத பழைய துவிச்சக்கர வண்டியில் வந்தார். நீலபெரிய பெட்டிசாரம் அணிந்திருந்தார். கையில் கோடாரி, கயிறு வைத்திருந்தார்.

[signature]

...07.

சாந்தன் நீலநிற கட்டைக்காற்சட்டை அணிந்திருந்தார். கையில் கத்தி, உரப்பாக், கயிறு, கொண்டு வந்தார். சிவப்புநிற அரைச்சைக்கின் கொண்டு வந்தார்.

எனது சித்தப்பா, சின்னையா வில்வராசா ஹமாலா பழைய கரியருடைய துவிச்சக்கர வண்டியில் வந்திருந்தார். சாம்பல் நிறத்தில் கட்டைக்காற்சட்டையும், சாரமும் அணிந்திருந்தார். சாரத்தின் நிறம் ஞாபகம் இல்லை. துவிச்சக்கர வண்டியின் கரியலில் கோடாரியும் உரபாக்கும் கட்டியிருந்தார்.

சித்தப்பாவின் மகன் பிரதீபன் அல்லது பிரபா கட்டைக்களிசானும் ரீசேட்டும் அணிந்திருந்தார். நிறம் ஞாபகமில்லை. கையில் சிறிய கத்தி வைத்திருந்தார்.

சித்தப்பாவின் மகன் பிரசாத் கட்டைக்காற்சட்டையும் சேட்டும் அணிந்திருந்தார். நிறம் ஞாபகம் இல்லை.

ஜெயச்சந்திரன் புதிய ஹமாலா துவிச்சக்கரவண்டியில் சென்றார், பெரிய பெட்டி போட்ட நீலசாரம் மட்டும் அணிந்திருந்தார். கையில் கத்தி, உரபாக், கயிறு கொண்டு வந்தார்.

நான் புதிய கீரோ துவிச்சக்கரவண்டியில் சென்றேன். நான் நீலநிற பெட்டியுடைய பழைய சாரம் மட்டும் அணிந்திருந்தேன். கையில் பெரிய வெட்டுக்கத்தி, உரபாக், கயிறு கொண்டு சென்றேன்.

...08.

நாங்கள் ஒன்பது பேரும் பாம்வத்தைக்கு சென்றோம். எங்கள் வீட்டில் இருந்து ½ மைல் தூரத்தில் பாம்வத்தை இருக்கிறது. நாங்கள் விறகு வெட்டுவதற்காக அங்கு போவோம். எங்கள் வீட்டிற்கு முன்னால் உள்ள மண் ஒழுங்கையால் துவிச்சக்கர வண்டியை தள்ளிக்கொண்டு சென்றோம். அந்தப்பாதை பாமுக்குச் செல்கிறது. சனங்கள் அந்தப்பாதையால் போய் வருவதுண்டு. பி.ப. 3.15 மணிக்கு அங்கு சென்றோம்.

நாங்கள் பாம்மிற்கு சென்று அங்குள்ள வீட்டுடன் கூடிய அடைக்கப்பட்ட காணிக்குள் துவிச்சக்கர வண்டிகளை விட்டோம். அதன்பின் அருகில் உள்ள காடு போன்ற இடங்களுக்குச் சென்று விறகு வெட்டினோம். விறகு வெட்டும் சமயத்தில் ஆட்கள் பிரிந்தோம். என்னுடன் ரவிவர்மன் உடன் இருந்து விறகு வெட்டினார். இயக்கத்தின் பொறுப்பில் முன்பு இருந்த காணி ஒன்றில் சிலர் தேங்காய் பிடுங்கினார்கள். தேங்காய் பிடுங்கியவர்களும் விறகு வெட்டியவர்களும் துவிச்சக்கரவண்டி விட்ட இடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது பி.ப 4.00, 4.15மணி இருக்கும். கொண்டு வந்த விறகுகளையும், தேங்காய்களையும் துவிச்சக்கர வண்டியில் கட்டிக்கொண்டிருக்க சித்தப்பாவின் மகன் பிரசாத் கொய்யாக்காய் பிடுங்கித் தரும்படி கேட்டார். நாங்கள் நின்ற இடத்திலிருந்து 100 மீற்றர் தூரத்திலுள்ள வீடு அமைந்துள்ள காணி ஒன்றிற்குள் கொய்யாப்பழம் பிடுங்க எல்லோரும் சென்றோம். நாங்கள் கொய்யாப்பழம் பிடுங்கச் சென்ற நேரத்தில் 2 ஆமி கொய்யா மரத்தின் கீழ் நின்றதைக் கண்டேன். கொய்யாப்பழம் பிடுங்கவில்லை. நாங்கள் தொட்டி ஒன்றிற்கு அடியில் சென்ற போது 2 இராணுவத்தினரைக் கண்டேன். தூரம் 25 மீற்றர் இருக்கும். ஒருவர் பச்சை வரியுடைய ரீசேட்டும், பச்சைக்கட்டைக்காற் சட்டையும் அணிந்திருந்தார். மற்றவர் கறுத்த பெனியனும், கறுப்பு கட்டைக்காற்சட்டையும் அணிந்திருந்தார். ஒருவர் துவக்கு வைத்திருந்தார். மற்றவர் கிறிஸ்கத்தி வைத்திருந்தார். காலில் செருப்பு

...09.

அணிந்திருந்தார். தொப்பி அணிந்திருக்கவில்லை. அப்பொழுது ஆமி எங்களைக் கண்டு விட்டு சிங்களத்தில் ஏதோ சொன்னார்கள். சிங்களம் தெரிந்த சித்தப்பா எங்களை நிற்குமாறு ஆமி கூறியதாகக் கூறினார். நாங்கள் அந்த இடத்தில் நின்றோம். துவக்குடன் நின்ற ஆமி அந்த இடத்தில் நிற்க, கத்தியுடன் நின்ற ஆமி அப்பால் சென்றார். அப்பால் ஆமி சென்றதும் துவக்குடன் நின்ற ஆமி சிங்களத்தில் எங்களை எங்களிடம் இருந்த கத்திகளை கீழே போடுமாறு பணித்ததாக சித்தப்பா கூறினார். நாங்கள் அப்படி செய்ததும் கத்தியுடன் சென்றவர் வேறு நால்வருடன் திரும்பி வந்தனர். வந்தபின் எல்லோரும் எங்களுக்கு கிட்ட வந்தனர். துவக்கு வைத்திருந்தவருக்கு சிறிய கண் ஒரு கண். முகம் முழுவதும் தாடி ஓரளவு வளர்ந்திருந்தது. கரியநிறம் மீசையும் இருந்தது. சாதாரண உயரமும், சாதாரண உடற்கட்டும் உடையவர் தலைமயிர் கட்டையாக இருந்தது.

கத்தியுடன் போனவர் பொதுநிறம். மீசை வைத்திருந்தார். கிளின் சேவ், தலைமயிர் கட்டையாக வெட்டியிருந்தார். மேற்படி இருவரையும் மீண்டும் கண்டால் எனக்கு அடையாளம் காட்டமுடியும். அவர்கள் நிற்கும்படி சொன்ன போது பி.ப. 4.30மணி இருக்கும். ஊறபோரில் ஒருவர் சித்தப்பா வில்வராசாவுடன் சிங்களத்தில் கதைத்தார். அவர்களில் ஒருவர் எங்கள் எல்லோரையும் எல்.ரி.ரி.ஈ என் உரத்த குரலில் சொன்னார். அத்துடன் ஏதோ எல்லாம் சிங்களத்தில் பேசினார். வந்த மற்ற நால்வரும் நீண்ட பச்சை வரியுள்ள ஜீன்சும், கொலருள்ள கறுப்பு, பச்சை ஆகிய நிறங்களில் ரீ-சேட்டும், செருப்புகளும் அணிந்திருந்தனர். வந்த நால்வரில் ஒருவர் கொட்டனுடனும் மற்றவர்கள் துவக்கும் கொண்டுவந்தார்கள். கொட்டனுடன் வந்தவர் வளர்ந்தவர், சிவந்த நிறமுடையவர், பெரிய தாடி வைத்திருந்தார். கறுத்த ரீசேட் அணிந்திருந்தார், வடிவானவர்.

வந்த ஆறுபேரில் ஒருவர் கத்தி, ஒருவர் கொட்டன், மற்ற நால்வரும் துவக்கு வைத்திருந்தனர். அந்த ஆறுபேரில் 3,4 பேரை 'க்கவர்' அடையாளம் காட்டமுடியும். நாங்கள் அப்படி நின்றவேளையில் நான்கு ஆமிக்காரர் தங்களுக்குள் சிங்களத்தில் ஏதோ கதைத்தனர். கதைத்த பின்னர் கையில்லாதவரை இருவர் கூட்டி தாம் இருந்த இடத்திற்கு சிறிது தூரம் அப்பால் கூட்டிச்சென்றனர். எங்கள் எல்லோரையும் வட்ட-மாக தள்ளி தள்ளி இருக்கச் சொன்னார்கள். அதன்பின் எங்களைச் சுற்றி நின்றார்கள். சுற்றி நின்ற நால்வரும் சித்தப்பா வில்வராசாவுடன் சிங்களத்தில் ஏதோ கதைத்தனர். சித்தப்பாவுடன் கதைத்துக் கொண்டிருந்த போது ரவிவர்மனை மீண்டும் கூட்டி வந்து எங்களுக்குப் பக்கத்தில் இருத்தினார்கள். 10,15 நிமிடத்திற்குள் ரவிவர்மனை திருப்பி கூட்டி வந்தார்கள். ரவிவர்மனை கூட்டி வந்தபின்னர் சித்தப்பாவின் மகனான சின்ன பிள்ளை பிரசாத்தை எங்களால் பார்க்க முடியாத வேலியால் மறைக்கப்பட்ட இடத்திற்கு ஒரு ஆமி கூட்டிச் சென்றார். பிரசாத்தைக் கூட்டிச் சென்றவுடன் ஐந்து ஆமியும் துவக்கு பிடிகளாலும், கொட்டனாலும் அடித்தனர். அடிக்கும் பொழுது ஏதோ எல்லாம் சிங்களத்தில் சொல்லி அடித்தார்கள். அதில் எல்.ரீ.ரீ. என்ற சொல் மட்டும் தான் எனக்கு விளங்கியது. அவ்வேளையில் ஐயோ அடியாதையுங்கோ சேர் நான் வழமையில் வாறனான். இளநீர் பிடுங்கித் தாறனான் என்று மன்றாடினேன். நான் அப்படிச் சொன்ன போது என்னை எழும்பச் சொல்லி நான் கட்டியிருந்த சாரத்தை உரிந்து கையால் சுற்றிவிட்டு, எனது கண்ணையும் வாயை-யும் இறுக்கிக் கட்டினார். சின்ன ஒற்றைக்கண் உள்ளவர்தான் எல்லோருக்கும் அடி, அடி அடித்தார். அத்துடன் எனது கண்ணையும் வாயையும் கட்டினார், அதே இடத்தில் வைத்து எனக்கு மேலும் அடித்தார். அநேகமாக தடியால் தான் அடித்தார்கள். நான் அந்த இடத்தில் கீழே விழுந்து விட்டேன். நான் விழுந்து கிடந்தபோது எனது கால் கைகளுக்கு அருகில் வேறு ஆட்கள் விழுந்திருந்ததையும் உணர்ந்தேன்.

அலிங்கிய சத்தம் கேட்டது. விழுந்த பின்னும் அடித்தார்கள். சிறிது
நேரம் மயங்கிக் கிடந்தேன். எனக்கு உணர்வு வந்தபின் சிங்களத்தில்
ஏதோ கதைத்துக் கேட்டது. எனக்கு உணர்வு வந்தபோது முதலில்
எனது கால் கைகளுக்கு இடையில் முனகிக்கொண்டிருந்தவர்கள் அந்த
இடத்தில் கிடக்கவில்லை என்பதையும் உணர்ந்து கொண்டேன். அதன்
பின் இரு ஆமிகள் எனது இரண்டு பக்க கைகளையும் பிடித்து தூக்கி
எழும்பு காம்புக்கு போவம் என்று கொச்சைத்தமிழில் சொன்னார்கள்.
அவர்கள் இரண்டுபேரும் இருபக்கமும் பிடித்தவாறாக நான் நடந்து
சென்றேன். அப்படி சென்றவேளையில் சிறிது தூரத்தில் இரண்டு கை
களையும் இரண்டு கால்களையும் பிடித்து ஆட்டிவிட்டு எறிந்தமாதிரி இருந
தது. அந்த நேரத்தில் ஏதோ எனது உடலில் தட்டியதையும் உணர்ந
தேன். அத்துடன் எனது கண்களைக் கட்டியிருந்த சாரம் கழன்றுவிட்
டது. பின் நான் நிலத்தல் பொத்தென விழுந்தேன். அப்படி நான்
இடது பக்கமாக சரிந்து விழுந்தேன். அப்படி நான் விழுந்து கிடந்த
போது ஒரு ஆளைக்கொண்டு போவதை இரண்டு ஆமி கொண்டு போவது
தெரிந்தது. பெரிய ஆளைக் கொண்டு சென்றதாக தெரிந்தது. நடத்
திக் கூட்டிச்சென்றது தெரிந்தது. நான் முன்பு விழுந்த இடத்திலிருந்து
நான் தற்பொழுது கிடந்த இடத்தைத் தாண்டிக் கொண்டு சென்றனர்.
நான் கிடந்த இடத்திலிருந்து அவர்கள் கொண்டு சென்ற தூரம் 10
மீற்றர் தூரம் இருக்கும். நான் விழுந்து கிடந்த வேளையில் எனது
உடம்பு முழுவதும் நொந்து கொண்டிருந்தது. காயங்கள் எதுவும் இருப்
பதாக நான் உணரவில்லை. என்னை வீசிவிட்டு வேலியைக்கடந்து வந்த
இரண்டு ஆமிக்காரர் என்னை தூக்கினார்கள். நான் இருந்தேன்.
அப்பொழுது அவர்கள் இருவரும் எனது நெஞ்சிலும் முதுகிலும் தமது
முழங்காலினால் அடித்தனர். அடித்தபோது நான் ஐயோ அம்மா
என்று கூறிக்கொண்டு தலை நிலத்தில் மோதும் வகையில் கீழே விழுந்ப்பி
தேன். சிறிது நேரத்தில் எனது கைகள் இரண்டையும் பிடித்து எழுப்பி
நடத்திச் சென்றனர். எனக்கு நெஞ்சிலும் முதுகிலும் அடித்தவர்களை

அடையாளம் காணமுடியாது. முக்கியமாக அச்சமயத்தில் இருளாக இருந்தமையால் அடையாளம் காணமுடியாதுள்ளது. என்னை அழைத்துச் செல்வதற்கு முன்னர் எனது கண்களைக் கட்டியிருந்த சாரத்தை வேலியிலிருந்து ஆமி எடுத்ததைக் கண்டேன். அவர்கள் என்னை மலசலகூட குழி ஒன்றுக்கு அருகில் கொண்டு சென்று நிறுத்தினார்கள். குழியின் ஓரமாக என்னை நிறுத்தியிருந்தார்கள். பார்த்த பொழுது குழியின் ஒருபக்க மூடி திறக்கப்பட்டு சற்று அரக்கப்பட்டு நிலத்தில் காணப்பட்டது. எனது ஒருபக்கத்தில் கத்தியுடன் ஒரு ஆமியும் / மற்றப்பக்கத்தில் அவர்களுடன் ஒரு ஆமியும் பின்னுக்கு என்னைப்பிடித்துக்கொண்டு ஒரு ஆமியும் நின்றதைக்கண்டேன், உணர்ந்தேன். அத்துடன் குழிக்குள் நீரில் கால் கைகளை அடிக்கும் சத்தம் கேட்டது. அதனை வைத்து குழிக்குள் யாரையோ குத்தியோ வெட்டியோ போட்டுள்ளதாக கருதினேன். அந்த நேரத்தில் கத்தியுடன் நின்ற ஆமி சிங்களத்தில் ஏதோ கூற என்னைப் பிடித்துக்கொண்டு பின்னால் இருந்த ஆமி எனது கண்களைக் கட்டினார். அச்சமயத்தில் ஐயோ என்னை சாக்கொல்லப்போகிறார்கள் என எனது அம்மாவை நினைத்தேன். கடவுளையும் நினைத்தேன். பிறகு எனது இரண்டு கைகளையும்கண்களைக் கட்டியிருந்த துணிக்கிடையில் வைத்து தள்ளிய பொழுது கட்டுப்பட்டிருந்த துணி கீழே விழுந்தது. அச்சமயம் நான் இப்படிச் சாவதைவிட சுட்டுச்செத்தாலும் பரவாயில்லை என எண்ணி தப்பிஓட நினைத்தேன். மலசலகூட குழிக்கும் கத்தியுடன் நின்ற சிப்பாய்க்கும் இடையில் குழி ஓரமாக ஓடிச் சென்று அருகில் இருந்த கம்பி வேலி ஒன்றுக்கு ஊடாக புகுந்து தப்பி ஓடினேன். நான் அப்படி ஓடியபொழுது வேலியில் இருந்த கதியால்களில் தடக்குப்பட்டேன். கதியால் முறிந்தது. என்னை ஆமி துரத்தினார்கள். அப்படி ஓடியபொழுது வெளியில் தொப்பு தொப்பென சப்பாத்துக்கள் நிலத்தில் அடிக்கும் சத்தம் கேட்டது. நான் திரும்பி ஆமி பொயின்ற் பக்கமாக ஓடி பாதையை கடந்து காட்டு வழியால் ஓடி அன்ரி வீட்டுக்கு அருகில் சென்ற போது நாய் குரைத்தது. நான்

அன்ரி வீட்டு கேற்றால் உள்ளே போனேன். எனது அன்ரி வீட்டுக்குச் செல்லும் போது ஜட்டி மட்டும் அணிந்திருந்தேன். நான் அன்ரி வீட்டிற்கு போகும்போது அன்ரியும், அன்ரியின் பிள்ளைகள் இருவரும் அம்மாவும் இருந்தனர். நான் அன்ரியிடம் சாரம் கேட்டு வாங்கி அணிந்தேன். அதன்பின் சிலபேரை ஆமி சாககொண்டு போட்டார்கள். இங்கே இருக்க வேண்டாம் வாருங்கோ என அன்ரியிடம் கேட்டேன். தோட்டைக் கடந்து ஆட்கள் இல்லாத வீட்டிற்குச் சென்றோம். அன்றைய இரவு நானும் அன்ரியும் அம்மாவும் பிள்ளைகளும் அந்த வீட்டில் இருந்தோம். அன்ரி, சித்தப்பா எங்கே என்று கேட்டபோது சித்தப்பாவையும் பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு சென்றதாக சொன்னேன். அவர்கள் அப்பொழுதே பாமிற்கு செல்ல முயன்றார்கள். நான் விடவில்லை. அன்ரி வீட்டிற்கு இரவு 7.30, 8.00மணிக்கு சென்றேன். மற்ற வீட்டிற்கு போனது 8.00, 8.30மணியிருக்கும். நான் மிகவும் வேதனையுடன் இருந்ததால் படுத்துவிட்டேன். அன்ரி அந்த இடத்திற்கு செல்ல வேண்டுமென கரைச்சல் கொடுத்தார்கள். நான் காலையில் செல்வோம் என கூறினேன். என்னை காலை 6.00மணிக்கு எழுப்பினார்கள். காலையில் அன்ரி என்ன செய்யப்போகிறாய் என கேட்டார். நான் முடியாவிட்டாலும் கரவெட்டிக்கு செல்லப் போவதாகக் கூறி புறப்பட்டேன். அவர்கள் பாமிற்குள் சித்தப்பாவை தேடி சென்றார்கள். மணியத்தின் 15 வயதுடைய மகனை சந்தித்தேன். அவரிடம் எனக்கு காய்ச்சலாக இருக்கிறது. கொடிகாமத்திற்கு கொண்டு சென்று விடுவாயோ என கேட்டு அவனுடன் சைக்கிளில் இருக்கமுடியாதநிலையிலும் பின்னுக்கு இருந்தபடி கொடிகாமம் நோக்கி வந்தேன். நான் வரும்போது மிருசுவில் செக் பொயின்ரால் வந்தேன். அந்த இடத்தில் எங்கே போகிறாய் என விசாரித்தார்கள். நான் வழமைபோல் பால் வாங்கச் செல்வதாக கூற அவர்கள் போகச் சொல்லிவிட்டார்கள். நான் கொடிகாமத்திற்கு வந்து காலை 6.45 மணியளவில் கொடிகாமத்தில் சந்தைக்கருகில் உள்ள கடையில் சைக்கிளை

நிறுத்தும் இடத்தில் நின்றேன். எனது தந்தையை எதிர்பார்த்து நின்றேன். அப்பா காலை 7.00மணிக்கு வந்தார். அந்தநேரம் அப்பா மிருசுவிலில் உள்ள எங்கள் வீட்டிற்கு செல்வதற்காக வந்தார். அப்பாவை சைக்கிளை திருப்புங்கோ கரவெட்டி வீட்டை போவம் என்று சொல்லி சைக்கிளில் செல்லும்போது சம்பவம் பற்றி அப்பாவிடம் கூறினேன். அப்பா, என்னிடம் பாக்கரை பொயின்றில் அடையாள அட்டை விசாரித்தால் துலைந்துவிட்டது நெல்லியடி பொலிசில் முறைப்பாடு கொடுப்பதற்கு செல்லுவதாக கூறும் படி அறிவுறுத்தினார். பொயின்றில் நாம் இறங்கி நடந்து கொண்டு போன போது கண்கள் வீங்கியும் சோர்ந்தும் இருந்த என்னைக்கண்ட இராணுவத்தினர் அப்பாவிடம் விசாரித்த பொழுது, நான் எனக்கு காச்சல் என அவர்களுக்கு கூற சைக்கிளில் ஏற்றிச் செல்லுமாறு பணித்தார்கள். நான் காலை 8.00மணியளவில் வீட்டிற்குச் சென்றேன். வீட்டிற்குச் போனபோது அம்மா இருந்தா. அவரிடம் பாயைக் கொண்டு வரச்சொல்லி படுத்துவிட்டேன். அந்த நேரம் அம்மா என்னை ஒன்றும் கேட்கவில்லை. அப்பா விபரத்தை அம்மாவுக்கு சொன்னார். அம்மாவும் அப்பாவும் நெல்லியடி ஈ.பி.டி.பி காரியாலயத்திற்கு சென்றனர். அத்துடன் கூடிவந்த ஆட்களின் வீடுகளுக்கும் சொல்ல சென்றுவிட்டனர். எனக்கு மூச்சு எடுக்க இயலாது இருந்தபொழுது ஈ.பி.டி.பி வாகனம் வந்து என்னை ஏற்றி, அவர்களின் காரியாலயத்திற்கு கொண்டு சென்றார்கள். அப்பொழுது நேரம் மு.ப.11.00 மணி இருக்கும். அங்கிருந்து ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றார்கள். ஆஸ்பத்திரியில் என்னை வாட்டில் விட்டார்கள். அப்பா என்னுடன் நின்றார். அம்மா ஐ.சி.ஆர்.சிக்கு முறையிட சென்றார். எனக்கு உள்நோக்கள் தான் ஏற்பட்டிருக்கிறது என கூறி தமிழ் வைத்தியம் செய்யுமாறு அறிவுறுத்தி குளிசைகள் தந்து 21.12.2000திகதி துண்டு வெட்டி வீட்டிற்கு அனுப்பினார்கள்.

நான் வீட்டிற்குப் போன சமயத்தில் ஈ.பி.டி.பி அலுவலகத்திற்கு துண்டு வெட்டிய விடயத்தை அவர்களுக்கு அறிவித்துவிட்டு வீட்டிற்கு சென்றேன். வீட்டில் இருந்த சமயத்தில் செஞ்சிலுவைச்சங்கத்தின் பிரதிநிதி ஒருவர் எனது கரவெட்டி மேற்கில் உள்ள வீட்டிற்கு வந்தார். வந்தபொழுது நேரம் காலை 9.00, 10.00மணி இருக்கும். பிரதிநிதி வந்து நடந்த சம்பவத்தைப் பற்றி என்னிடம் விசாரித்து குறிப்பெடுத்துக் கொண்டார். அச்சமயத்தில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் எமது வீட்டிற்கு அருகில் வந்து நின்றன. அதில் இராணுவத்தினர் வந்ததாக அறிந்தேன். இராணுவத்தினரைக் கண்டபோது வீட்டிலிருந்தவர்களும் அயலவர்களும் குழறினார்கள். அச்சமயத்தில் யாரோ ஒருவர் நெல்லியடியிலுள்ள ஈ.பி.டி.பி அலுவலகத்திற்கு தகவல் கொடுத்ததன் பேரில் ஈ.பி.டி.பி அமைப்பினரும் எமது வீட்டிற்கு வந்தனர். சம்பவம் பற்றி என்னிடம் விசாரித்துக்கொண்டிருந்த ஐ.சி.ஆர்.சி.இன் பிரதிநிதி எம்மையெல்லாம் பயப்பிடாமல் அமைதியாக இருக்கும்படி கூறிவிட்டு வெளியே சென்று விசாரித்துவிட்டு திரும்பிவந்து மிருசுவில் கொமாண்டர் வந்திருப்பதாகவும், நடந்த சம்பவம் பற்றி என்னை விசாரிக்க வந்திருப்பதாகவும் கூறினார். ஐ.சி.ஆர்.சி பிரதிநிதி என்னிடம்தான் வாக்குமூலம் எடுத்து முடித்தபின் மிருசுவில் கொமாண்டர் உங்களை விசாரிப்பார் என்று கூறினார். நான் பயமாக இருக்கிறது என தெரிவித்தபோது தானும் உடன் இருப்பதாக தெரிவித்தார். பின் இரண்டு இராணுவத்தினர் வீட்டிற்குள் வந்தனர். வந்தவர் தம்மை எமக்கு அறிமுகப்படுத்தி ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம். நடந்ததை தெரிவிக்குமாறு கேட்டார். கூட வந்த ஆமி ஒருவர் தமிழில் மொழிபெயர்த்தார். நான் நடந்த சம்பவங்களை தெரியப்படுத்தினேன். அவர்கள் குறிப்பெடுத்துக் கொண்டனர். அதன்பின் ஐ.சி.ஆர்.சி பிரதிநிதியுடன் ஆமிக்காரரும் சென்றுவிட்டனர். மறுநாள் 22.12.2000அன்று காலை 9.00 மணியளவில் முதல்நாள் வந்த மிருசுவில் கொமாண்டரும், கே.கே.எஸ் இல் இருந்து வேறு பல சிவப்புத்

தொப்பி அணிந்த இராணுவத்தினரும் வீட்டிற்கு வந்தனர். அன்றும் ஈ.பி.டி.பி அலுவலகத்திற்கு அறிவித்து அவர்களும் வந்தார்கள். நாங்கள் கே.கே.எஸ் இல் இருந்து வந்திருக்கிறோம் உங்கள் பிரச்சினைகளை பார்ப்பதற்கு வந்திருக்கிறோம், பயப்பட வேண்டாம் மிருசுவிலுக்கு வந்து இடத்தைக் காட்டுமாறு கேட்டார்கள். நானும் எனது வீட்டாரும் தனியே செல்வதை மறுத்து, வெள்ளைக்காரரோ, அல்லது ஈ.பி.டி.பி யோ வந்தால் வருவதாக கூறினேன். அதன்பின் ஈ.பி.டி.பி, கரவெட்டி மேற்கு கிராமசேவையாளர், அம்மா, அப்பா ஆகியோரை அழைத்துக்கொண்டு நேரே சம்பவம் நடந்த மிருசுவில் பாழிற்கு கூட்டிச்சென்றனர். பாழிற்கு செல்வதற்கு முன்னர் எனது மிருசுவில் வடக்கு வீட்டிற்கு கூட்டிச்சென்று சம்பவதினத்தில் அதாவது 19.12.2000தினத்தில் என்னென்ன எங்கெங்கே நடந்ததோ அவற்றை செய்தும் காட்டியும் காட்டுமாறு கேட்கப்பட்டேன் நான் அனைத்தையும் காட்டி கூறினேன். தொட்டியடி, தூக்கியெறிந்த வேலி, மலசலகூட குழி என்பவற்றையும் காட்டினேன். மலசலகூட குழி மூடப்பட்டு அதன்மேல் பச்சை தென்னோலை இரண்டு முக்கியமாக இரத்தக்கறையை மறைத்து போடப்பட்டிருந்தது. அச்சமயம் இரத்தத்தைக் கண்டதும் நான் நிலைகுலைந்தேன். அச்சமயம் நேரம் பி.ப.1.00மணி அளவில் இருக்கும், அப்பொழுது என்னை அப்பால் அழைத்துச்சென்றனர். அவ்வேளையில் தென்னம் ஓலையை அகற்றி பிற்றை திறப்பதை அவதானித்தேன். கொஞ்ச நேரத்தில் எனக்கு அருகில் நின்றவர்கள் என்னை ஒன்றுக்கும் பயப்படவேண்டாம் எனக்கூறி என்னை பிற்றுக்கு அருகில் அழைத்துச்சென்றனர். எனக்கு நடுநடுங்கத் தொடங்கிவிட்டது. இராணுவத்தினர் தெம்பை ஏற்படுத்திக்கொண்டு அவர்களால் திறக்கப்பட்டிருந்த குழியை, குழிக்குள்ளே பார்க்குமாறு கூறினர். நான் பார்த்த பொழுது குழியில் தண்ணீர் இருக்கவில்லை. பெரிய ஆரு அழுகிய நிலையில் உள்ளே காணப்பட்டது. ஒரே மணமாகவும் இருந்தது. அப்பொழுது அருகில் நின்ற தமிழ் பேசக்கூடிய ஆமி என்ன " தம்பி வெட்டிப்போட்ட

தென்றீர் ஆருதானே கிடக்குது. வேறொன்றையும் காணவில்லையே" என கேட்டார். நான் சத்தியமாக சூத்திப்போட்டதைக் கண்டதையும், தண்ணீர் சத்தம் கேட்டதையும் கூறினேன். நான் மலசலகூடத்தின் பின்புறமாக சுவரில் இரண்டு பக்கங்களிலும் தொங்கியபடி சாம்பல் நிற வீட்டுமின்சுற்றுக்களுக்கு பாவிக்கும் நீண்ட வயர் ஒன்றை கண்டேன். அதன் வெளிப்பக்கத்தில் தொங்கிக்கொண்டிருந்த முனை முடிச்சுப் போடப்பட்டு காணப்பட்டது.

பின் எம்முடன் நின்ற சிவப்புத்தொப்பி அணிந்த ஆமி சென்று வேற இரண்டு இராணுவத்தினரை அழைத்து வந்தனர். அவர்கள் வந்தபொழுது சாதாரணமான பெனியனும் கட்டைக்காற்சட்டையும் அணிந்திருந்தனர். என்னுடன் நின்ற சிவப்புத்தோப்பி அணிந்திருந்த ஆமி இவையளோ உன்னைப் பிடித்தவர்களென கேட்டார். நான் இல்லை சேர் என்றேன். அவர்கள் சென்றபின் வேறு ஒரு ஆமி கொண்டுவரப்பட்டார். அவரும் சாதாரணமான பெனியனும் கட்டைக்காற்சட்டையும் அணிந்திருந்தார். அவரையும் காட்டி பிடித்தது அவரோ என விசாரித்தனர். நான் இல்லை என்றேன். அதன்பின் இன்னும் இரு ஆமியைக் கூட்டி வந்தனர். அவர்களும் சாதாரண பெனியனும் கட்டைக்காற்சட்டையும் அணிந்திருந்தனர். நான் அவர்களைக் கண்டவுடன் பயத்தினால் கத்தத் தொடங்கிவிட்டேன். நான் கத்தியதும் ஒன்றுக்கும் பயப்படவேண்டாம். இவர்களோ பிடித்து அடித்த ஆட்கள் என்று கேட்க நான் இவையள்தான் ஆரம்பத்தில் பிடித்து அடித்த ஆட்கள் என்று கூறினேன். பின்பு என்னை தூரத்திற்கு கூட்டிச் சென்றனர். அதன்பின் இரண்டு சிவப்புத்தொப்பி அணிந்த ஆமிகள் என்னையும், அப்பாவையும் கிராமசேவகரையும் ஈ.பி.டி.பி ஒருவரையும் ட்ரக் விட்டிருந்த இடத்திற்கு கூட்டி வந்தனர். அம்மாளை சம்பவம் நடந்த இடத்திற்கு கூட்டிச்செல்லாது ட்ரக்கடியில் விட்டிருந்தனர். அதன்பின் எங்களை ஒரு ட்ரக்கில் ஏற்றி மிருசுவில் ஆஸ்பத்திரிக்கு கொண்டு வந்தனர். வேறு சில சிவப்புத்தொப்பி அணிந்த இராணுவத்தினர் சம்பவம் நடந்த இடத்தில் நின்றி-

ருந்தனர். ஆஸ்பத்திரியில் சோடா, மதியசாப்பாடு தரப்பட்டது. அங்கே கனநேரம் வைக்கப்பட்டிருந்தேன். அங்கு வைத்து சிவப்புத் தொப்பி அணிந்திருந்த இராணுவத்தினர் என்னிடம் விசாரித்துப் பதிவுகளை செய்தனர். அதன்பின்னர் திரும்பவும் ட்ரக்கில் ஏற்றி ஆசைப் பிள்ளை ஏற்றம் வழியாக அம்மாவை தவிர்த்து ஏனையவர்களைக் கூட்டிச் சென்று கக்கூசு குழியடியில் வைத்து என்னையும் இரத்தம் தோய்ந்த குழியையும் படம் எடுத்தனர். முன்கூறிய கக்கூசு குழிக்கு பக்கத்தில் பிறிதொரு கக்கூசு குழி காணப்பட்டது. அதற்கருகிலும் வைத்து படம் எடுத்தனர். அக்குழி உடைக்கப்பட்டு காணப்பட்டது. பின் ட்ரக்கில் ஏற்றிக்கொண்டு வந்து இராசகிராமத்தில் விட்டனர். வீட்டிற்கு வரும் போது மாலை 4.00, 4.30 மணி இருக்கும். ஈ.பி.டி.பி யினர் அடிக்கடி வந்து என்னைப் பார்த்துச்சென்றனர்.

25.12.2000தினத்தன்று மு.ப.11.00 மணியளவில் எனது வீட்டிற்கு பொலிஸ், இராணுவம் என பலர் வந்து நெல்லியடி பொலிஸ் நிலையத்திற்கு வந்து விசாரணையில் உதவுமாறு கேட்டனர். வழமை போல் வீட்டில் உள்ள அனைவரும் குழறினார்கள். நான் தனியே செல்ல மறுத்தேன். ஈ.பி.டி.பியினருக்கும் அறிவித்து அவர்களும் வந்திருந்தனர். பின் என்னுடன் 19.12.2000அன்று மிருசுவிலுக்கு சென்றவர்களின் உறவினர்களும் அங்கே வந்திருந்தனர். அவர்களைக் கண்டதும் எனக்கு தெம்பு வந்துவிட்டது. அதன்பின் ஈ.பி.டி.பியினர், நான், எனது அம்மா, அப்பா, மற்ற உறவினர்களையும் அழைத்து மிருசுவில் ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர். அப்பொழுது நேரம் மதியம் 1.00மணி இருக்கும். அங்கே இருக்க வைக்கப்பட்டோம். பின் பல வாகனங்களில் பலரும் வந்தபின் மிருசுவில் பாம்பிற்கு சம்பவம் நடந்த இடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டோம். அங்கு மோட்டார் சைக்கிள்கள் மற்றும் பல வாகனங்கள் வந்தன. படங்குகள் கொண்டுவரப்பட்டது. மண்வெட்டிகள் கொண்டு

வரப்பட்டன. நான் அவற்றைப்பார்த்து பயந்தேன். எனது கூட்டாளி களுக்கு நடந்த விடயம் மூளையில் தட்ட தொடங்கியது. நாங்கள் எல்லோரும் சூழ்ந்த எங்களை அழைத்துச்சென்று பிக்கப் வாகனத்தில் இருத்தி விட்டனர். அங்கே நீதிவானும், வைத்திய அதிகாரியும், மற்றும் பொலிஸ் இராணுவ அதிகாரிகளும் இருந்தனர். அதன்பின் எடுக்கப்பட்ட சடலங்கள் காண்பிக்கப்பட்டு அடையாளம் காட்டினேன். நான் அப்போது இருந்த மனநிலையில் மிகவும் சிரமப்பட்டே அடையாளம் காட்டினேன்.

முதல் முதலில் ஆணின் சடலம் ஒன்று காட்டப்பட்டது. அதனை தெய்வகுலசிங்கத்தின் சடலம் என அடையாளம் காட்டினேன். எனது அப்பா பொன்னுத்துரையும் அடையாளம் காட்டினார். அடுத்த சடலத்தை விஸ்வராசா பிரதீபனது சடலம் எனவும், மூன்றாவது சடலத்தை சின்னையா விஸ்வராசாவினது சடலம் எனவும், அடுத்த சடலத்தை ஞானபாலன் ரவிவர்மனின் சடலம் எனவும், ஐந்தாவது சடலத்தை நடேசு ஜெயச்சந்திரனது சடலம் எனவும், அடுத்த சடலத்தை கதிரன் ஞானச்சந்திரனின் சடலம் எனவும், ஏழாவது சடலத்தை ஞானச்சந்திரனின் மகள் சாந்தனினது சடலம் எனவும், இறுதியாக எடுக்கப்பட்ட சடலத்தை விஸ்வராசாவினது மகள் பிரசாந்தினது சடலம் எனவும் அடையாளம் காட்டியிருந்தேன். அவர்கள் எல்லோரும் எனது நெருங்கிய உறவினர்கள். என்பதுடன் அவர்களை நான் நன்கறிந்த வகையிலும் சடலங்களை நீதிவானுக்கும் வைத்திய அதிகாரிக்கும் அடையாளம் காட்டியிருந்தேன். அதன்பின் எம்மை வைத்து அடித்த இடத்திற்கும் மலசலகூடக்குழி இருந்த இடத்திற்கும், நான் தப்பி ஓடிய வேலி கண்டாயம் இருந்த இடத்திற்கும் நீதிவானையும், பொலிஸ் அதிகாரிகளையும் கூட்டிச்சென்று காட்டினேன். அதன்பின் ஜீப்பில் கூட்டிக் கொண்டு நெல்லியடிப் பொலிஸ் நிலையத்திற்கு சென்றனர். நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் இருக்குமாறு பொலிஸ் தரப்பில் கூறப்பட்டது. நான் பயத்தால் அங்கே இருக்க மறுத்து ஈ.பி.டி.பி. இடம் விடுமாறு கேட்டேன். அந்த வகையில் நெல்லியடி ஈ.பி.டி.பி இடம் பொலிசார் என்னை ஒப்படைத்

தனர். மறுநாள் யாழ்ப்பாணம் ஈ.பி.டி.பி காரியாலயத்திற்கு அழைத்து செல்லப்பட்டேன். அங்கிருந்து 30,12.2000அன்று ஈ.பி.டி.பி என்னை ஏற்றிக்கொண்டு மந்திகை காரியாலயத்திற்கு கொண்டு வந்து அங்கு வைத்து கொடிகாமம் பொலிசாரிடம் ஒப்படைத்தனர். பின்னர் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் பெரிய அதிகாரிகள் முன்னிலையில் எனது வாக்குமூலம் பதியப்பட்டது.

<u>மன்று</u>:-

நீங்கள் தெரிவித்த சாட்சியத்தில் மிருசுவிலுக்கு தினமும் செல்வதாக கூறியிருந்தீர்கள். ஆனால் 19.12.2000அன்று இரவு அங்கே தங்கி நிற்க தீர்மானித்திருந்தீர்கள். அது ஏன் என்று வினவியபொழுது சாட்சி 19.12.2000க்கு முன்பும் பல தடவைகள் தேவைக்கு ஏற்றவாறு மிரு-சுவிலில் இரவைக்கழித்திருக்கிறேன் என கூறினார். அப்படியான ஒரு தீர்மானத்தை இரவில் தங்குவதென்பதை மிருசுவிலுக்கு சென்றபின்தான் தீர்மானித்தேன்.

எனது அத்தானாகிய (ஒன்றுவிட்ட) தெய்வகுலசிங்கம் 19.12.2000 அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ பெண்கள் அணியும் பாதணியைக் கண்டது பற்றியோ அல்லது மஞ்-சள் நிற பஞ்சாபியுடன் ஆள் ஒருவர் புதைக்கப்பட்டது பற்றியோ எனக்கு எதுவும் கூறவில்லை. அவருடன் அவர் அண்மையில் திருமணம் செய்தமையால் எனக்கு நெருங்கிய பழக்கம் இல்லை. 19.12.2000அன்று குறித்த பாதணிகளையோ பஞ்சாபியுடன் கூடிய சடலத்தையோ பார்ப்பதற்கு திட்டம் தீட்டியது எதுவும் எனக்கு தெரியாது. அது பற்றி தெய்வகுலசிங்கம் எனக்கு எதுவுமே கூறவில்லை.

...21.

என்னை மலசலகூடக்குழிக்கு அருகே நிறுத்தி-
யிருந்த பொழுது ஒரு பக்கத்தில் நின்றிருந்த ஆமி கையில் வைத்திருந்த
கத்தியானது மிக நீண்ட கத்தி, வளைவு அற்றது. கிட்டத்தட்ட வாளின்
அமைப்பினைக் கொண்டது. எனினும் அந்தக் கத்தி நானோ அல்லது
என்னுடன் கூடவந்தவர்களோ கொண்டு சென்ற கத்தி அல்ல.

நான் பாம்பிற்கு அடிக்கடி சென்று வருவதால்
அங்கிருந்த இராணுவத்தினரை எனக்குத் தெரியும். ஆனால் 19.12.2000
அன்று நான் சந்தித்த ஆறுபேரும் எனக்கு அறிமுகமில்லாதவர்கள்.

மேற்படி எட்டுப்பேர்களுடைய மரணங்கள்
ஏன் ஏற்பட்டதென எனக்கு கூறமுடியாதுள்ளது. எம்மிடம் பணம் இருக்க-
வில்லை. ரவிவர்மனும் சாந்தனும் கைகளில் பவுண் மோதிரம் அணிந்திருந்
தார்கள். ( குறிப்பு:- சடலங்களில் குறித்த இருவரினது சடலங்களில்
மேற்படி மோதிரங்களை நான் அவதானிக்கவில்லை) நான் கண்ட 6 ஆமிக்
காரரிலும் சாராய வாடை வீசிக்கொண்டிருந்தது. மரணத்தை ஏற்படுத்-
தும் அளவிற்கு நானோ அல்லது ஏனையவர்களோ எந்த தவறையும் செய்ய
வில்லை என உறுதி கூறுகிறேன்.

எனது உறவினர்கள் எட்டுப்பேரினதும் மரணங்
கள் ஆமிக்காரர்களால் அடித்து சித்திரவதைக்குட்படுத்தப்பட்டு வெட்டிப்
போடப்பட்டதால் ஏற்பட்டதென நான் திடமாகக் கூறுகிறேன். இவற்றை
தவிர இந்த விசாரணையில் கூறுவதற்கு வேறெதுவும் இல்லை.